2022 ஜனவரி 6] [பேரவைத் தலைவர்]

இன்றைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டத்திற்குக் கால்கோளிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் அளித்த, இன்றைக்கு எடுக்கப்படவுள்ள வினா எண் ஒன்றிற்குப் பதிலளிக்க மகிழ்வோடு அழைக்கிறேன்.

4. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1—

மெட்ரோ இரயில் சேவை

***10861—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெட்ரோ இரயில் சேவையை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து பல்லாவரம் மற்றும் குரோம்பேட்டை வழியாக வண்டலூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதில்.

(அ) மற்றும் (ஆ) வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் சென்னை மாநகருக்கான புதிய பேருந்து முனையம் அமைக்கப்பட்டு வருவதன் காரணமாக, மெட்ரோ இரயில் இணைப்பை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதனைக் கருதி, இந்தத் தடத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் பன்னாட்டு நிறுவனத்தின் மூலமாக முடிக்கப்பட்டுள்ளன. இந்த விரிவான இறுதித் திட்ட அறிக்கை தற்போது அரசின்

ஆய்வில் இருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில், பணிகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

ஏரியை ஆழப்படுத்துதல்

***2479—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, திருப்பூண்டி மேற்கு ஊராட்சியில் உள்ள கீரநேரி ஏரியை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்தில் திருப்பூண்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு மேற்கே காமேஸ்வரம் என்றொரு தலம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் கீரநேரி என்ற ஒரு பெரிய ஏரி இருக்கின்றது. சுமார் 100 ஹெக்டேர் பரப்பளவுள்ள அந்தப் பெரிய ஏரியின் மேற்குப் பகுதி, Traditional Water Bodies *என்ற திட்டத்தின்கீழ் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் தூர்வாரப்பட்டது. அதன் கிழக்குப் பகுதி மண்மேடிட்டிருக்கிறது. நாகப்பட்டினம்–வேளாங்கண்ணி இரயில்வே பாதைக்கு அந்தப் பகுதியிலிருந்து மண் எடுப்பதற்கு நாகப்பட்டினம் மாவட்ட*